

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | மார்ச் 30, 2017 | புரட்சி 16 | முழக்கம் 11 | விலை: ரூ.3.00


# பாரூக் படுகொலை: இஸ்லாமிய எழுத்தாளர்கள் – ஜனநாயக சக்திகள் அதிர்ச்சி

தமிழ்நாட்டில் இஸ்லாமிய அடிப்படை வாதம் தலைதூக்குவது மோசமான விளைவுகளை உருவாக்கி விடும் என்று இஸ்லாமிய எழுத்தாளர்கள், ஜனநாயக சக்திகள் கவலையையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளனர்.



Incident Seeks To Create Schism Between Dravidian Ideology And Community

Farooq murder: Shock, fear & worry grips Muslim groups

MINORITY INTERESTS | There are several organisations dedicated to the Muslim community. Here are a few:

Abdullah.Nurullah@timesgroup.com

The brutal murder of outspoken Muslim atheist H Farooq in Coimbatore last week is seen by many as an attack on the healthy relationship between the Mus-

fied. The killing of the activist has set the community back." For Salma and several other Muslim writers, filmmakers and social workers, who had taken part in a two-day conference at Yercaud for an exchange of progressive ideas this month, the hacking of the outspoken rationalist came as a

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தோழர் பாரூக்கின் படுகொலை - பல இஸ்லாமிய சிந்தனையாளர்கள், முற்போக்கு இஸ்லாமிய குழுவினரிடம் அதிர்ச்சியையும் அச்சத்தையும் உருவாக்கியிருப்பதோடு, அரை நூற்றாண்டுக்கு மேலாக திராவிடர் இயக்கத்துக்கும் இஸ்லாமியர்களுக்கிடையே நிலவிய நட்பு உறவையும் சிக்கலாக்கி இருக்கிறது என்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு (மார்ச் 24, 2017) எழுதியிருக்கிறது.

கீரனூர் ஜாகிர் ராஜா, நாவல் சிறுகதைகளை எழுதி வரும் இலக்கியவாதி. தன்னுடைய நாவல்களில் பகுத்தறிவு, முற்போக்கு கருத்துகளை எழுதி வருகிறார். ‘மீன்காரத் தெரு’ என்ற அவரது நாவலில் திண்டுக்கல் கீரனூர் இஸ்லாமியர்களிடையே நிலவும் வர்க்க குழு பாகுபாடுகளை சித்தரித்திருந்தார். தொழில் வணிகத்தில் வசதியுடன் வாழும் ‘இராவுத்தர்’ பிரிவினர், மசூதிகளில் சேவை பணி செய்யும் வசதியற்ற ‘லப்பை’ பிரிவினருடன் திருமண உறவுகளை தடை செய்திருப்பதை அந்த நாவல் பேசுகிறது. பாரூக் படுகொலைக் குறித்து அவர் தனது கவலையையும் அதிர்ச்சியையும் வெளிப்படுத்தியுள்ளார். இனி தனது எழுத்துகளில் ஒலிக்கும் நீதிக்கான குரல் தொடர்ந்து கேட்குமா? அல்லது மவுனமாக்கப்படுமா என்று அஞ்சுகிறேன். அல்லா உருவாக்கிய இஸ்லாம் பகுத்தறிவுக்கு இடமளிப்பதாகவே நான் கருதுகிறேன். அரபு பழங்குடியினர் ஆயிரக்கணக்கான உருவங்களை வழிபட்டு வந்ததை நிறுத்தி உருவ வழிபாடு கூடாது என்று கூறியது இஸ்லாம் மார்க்கம். இஸ்லாம், கடவுள் மறுப்பான நாத்திகத்தை ஏற்கவில்லை. ஆனாலும் நாத்திக சிந்தனை கொண்ட பல முஸ்லிம் புலமையாளர்கள் இருக்கிறார்கள்” என்றார் ஜாகிர் ராஜா.

பாரூக் கொலைக்கு யார்காரணம் என்பது வெளிப்படையாக அறிவிக்கப்படவில்லை. ஆனாலும் இஸ்லாமிய இலக்கிய வட்டத்தில் இந்தக் கொலை அதிர்ச்சி அலைகளை உருவாக்கி இருக்கிறது. இஸ்லாமிய அடிப்படைவாத சக்திகளே திட்டமிட்டு, இந்தக் கொலையை நடத்தியிருக்கிறார்கள் என்றே அவர்கள் கருதுகிறார்கள். இந்த நடவடிக்கைகளால் இதுவரை அச்சுறுத்தல், மிரட்டல் கருத்துகளை பேசி வந்த ஆர்.எஸ்.எஸ். போன்ற இந்து பிற்போக்கு அமைப்புகள் இனி தங்கள் செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கான களம் தயாராகி வருகிறது என்ற உணர்வுக்கு வரக்கூடும். பாரூக் படுகொலையைவிட இஸ்லாமிய சமூகம் காக்கும் மவுனம்தான் மிகப் பெரும் அச்சமூட்டுகிறது என்று அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள். படுகொலையைக் கண்டித்து இஸ்லாமிய சமூகத்தின் ஒருமித்த கண்டனக் குரல் எழுந்திருக்க வேண்டும். அப்படி ஏதும் அழுத்தமான கண்டனங்கள் எழவில்லை என்பதே அவர்களின் கருத்தாக இருக்கிறது.

பெண் கவிஞரும் தி.மு.க.வைச் சார்ந்தவருமான தோழர் சல்மான், “அந்தக் கொலை எங்கள் அனைவரையும் அச்சுறுத்துகிறது. பெரியாரிஸ்ட் பாரூக் படுகொலை செய்தி கோவையை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருப்ப தோடு, முஸ்லிம் சமூகத்துக்கே பின்னடைவை உருவாக்கியுள்ளது” என்று கூறியுள்ளார்.

ஏற்காட்டில் முற்போக்கு சிந்தனைக் கொண்ட எழுத்தாளர்கள் ஒன்று கூடி தங்கள் கருத்துகளை பகிர்ந்து கொண்டார்கள். ‘சங்கமம்’ என்ற பெயரில் இந்த ‘ஒன்றுகூடல்’ நிகழ்ந்தது. பாரூக் படுகொலை நிகழ்ந்த நேரத்தில் ஏற்காட்டில் நடந்த ஒன்று கூடலில் இந்தப் பிரச்சினையே மய்யமாக விவாதிக்கப்பட்டது. திரைப்படத் தயாரிப்பாளர்கள், திரைக்கதை வசனம் எழுதுவோர், சமூக செயல்பாட்டாளர்கள் என பல்வேறு பிரிவினரும் பங்கேற்ற இந்த இரண்டு நாள் மாநாட்டில் பலரும் தெரிவித்த கருத்து இது தான்.

“சாகித்ய அகாடமி விருது பெற்ற பகுத்தறிவாளர் எம்.எம். கல்புர்கி கொல்லப்பட்டபோது உருவான அதிர்ச்சிதான் பாரூக் படுகொலையும் எங்களிடம் உருவாக்கியிருக்கிறது. எங்களுக்கு கருத்துரிமை உண்டு என்று நாங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறோம். நடந்த சம்பவம் அந்த உரிமை மறுக்கப்பட்டு விடும்போல் தெரிகிறது. ஆர்.எஸ்.எஸ். திசை வழியை நாம் செயல்படுத்துகிறோமோ என்று அஞ்சுகிறோம்.” - என்பதே பலரும் தெரிவித்த கருத்து, சென்னை பல்கலைக்கழக ‘அரசியல் ஆய்வுத் துறை’ பேராசிரியர் இராமு. மணிவண்ணன், “ஏற்கனவே முற்போக்கு சிந்தனை கொண்ட இஸ்லாமியர்கள் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தவே தயங்குகிறார்கள். பாரூக்கின் இந்தக் கொடூர படுகொலை அவர்களை மேலும் அச்சுறுத்தி முழுமையாகவே மவுனிக்கச் செய்துவிட்டது. நாட்டில் வாழும் இஸ்லாமிய பொது மக்கள் இத்தகைய அடிப்படைவாதிகளின் சகிப்புத் தன்மையற்ற செயல்பாடுகளை ஆதரிக்க மாட்டார்கள் என்றே நம்புகிறேன்” என்று கூறினார்.

ஆவணப்பட இயக்குனர்கோம்பை அன்வர், எழுத்தாளர் இமயம், கவிஞர் சுகிர்தரணி, எழுத்தாளர் மீரா மொய்தீன், படத் தயாரிப்பாளர் தாமிரா, கவிஞர் ஆதவன் தீட்சண்யா, நடனக் கலைஞர் சுவர்ணமால்யா கணேஷ் உள்ளிட்ட ஏராளமான கலைஞர்கள் இதில் பங்கேற்றனர்.

தமிழ்நாடு முழுதும் 300 மசூதிகளில் சமூகப் பணியாற்றும் முகம்மது சையது, இந்த மாநாட்டில் பேசும்போது இஸ்லாமியர்களை (மதம் தவிர்த்த) சமூகப் பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். “இறைவனை வணங்குதலைவிட சமூகத்துக்குப் பணியாற்றுவதே உண்மையான இறைப்பணி என்ற கருத்தை பரப்ப வேண்டும்” என்றார்.

- டைம்ஸ் ஆப் இந்தியா’ இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

## இதுவே கழகத்தின் நிலைப்பாடு

## “இனி தோழமையை முடிவு செய்ய வேண்டியது இஸ்லாமிய அமைப்புகள்தான்!”



பெரியார் இயக்கத்துடனான தோழமையை முடிவு செய்ய வேண்டியது, இஸ்லாமியர் அமைப்புகள்தான் – இதுவே கழகத்தின் நிலைப்பாடு என்று சென்னையில் பாரூக் படத்திறப்பு நிகழ்வில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிவித்தார்.

இஸ்லாமிய மத அடிப்படைவாதிகளால் இறை மறுப்பாளராக இருந்த ஒரே காரணத்துக்காக படுகொலை செய்யப்பட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் மனித நேயப் போராளி பாரூக் படுகொலைக்கு கண்டனக் கூட்டம் கருத்தரங்கமாக சென்னையில் மார்ச் 26 மாலை இராயப்பேட்டை இலாயிட்ஸ் சாலையில் உள்ள விஜய் திருமண மண்டபத்தில் கழக சார்பில் நிகழ்ந்தது. ‘பாரூக் படுகொலையும் நமது நிலையும்’ என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கிற்கு மாவட்ட செயலாளர் உமாபதி தலைமை தாங்கினார். தலைமைக் குழு உறுப்பினர் கு. அன்பு தனசேகரன், ‘சேவ் தமிழ்’ செந்தில், திருமுருகன் காந்தி (மே 17) வழக்கறிஞர் திருமூர்த்தி, இஸ்லாமியராக பிறந்தாலும், இஸ்லாமிய மதக் கருத்தியலை மறுக்கும் தோழர்கள் நடத்தும் நாத்திகர் பண்பாட்டுக் கழகம் சார்பில் அலாவுதின் ஆகியோர் கண்டன உரையாற்றினர். கழகத் தோழர்கள் கவிஞர்கள் இரவி பாரதி, இராமசாமி வீரவணக்கக் கவிதைகளை வாசித்தனர்.

ராஜீ, சங்கீதா என்ற இளம் தோழர்கள், மேடையில்

(4ஆம் பக்கம்)

# சகிப்பின்மையின் அப்பட்டமான வெளிப்பாடு

*‘தமிழ் இந்து’ நாளேடு மார்ச் 24ஆம் தேதி பாரூக் படுகொலைக் குறித்து எழுதிய தலையங்கம்.*

## ‘தமிழ் இந்து’ தலையங்கம்

கோவையில் நடந்திருக்கும் இளைஞர் ஃபாருக் கொலை அதிர்ச்சியைத் தருகிறது. இந்தக் கொலை, தமிழகத்தில் உருவாகிவரும் மோசமான சூழலின் வெளிப்பாடு என்பது அதிர்ச்சியைத் தாண்டி ஆழ்ந்த கவலையை உருவாக்குகிறது. திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைந்து செயலாற்றிவந்த ஃபாருக், சமூகத்தின் சாதி, மதப் பாகுபாடுகளையும் மூடநம்பிக்கைகளையும் சாடிவந்தவர். தொடர்ந்து இறைமறுப்புக் கொள்கைகளைப் பேசிவந்தவர். அவருடைய செயல்பாட்டின் காரணமாகவே நடந்ததாகச் சொல்லப்படும் இந்தக் கொலை, தமிழகத்தில் உருவாகிவரும் சகிப்பின்மையின் அப்பட்டமான வெளிப்பாடு.

தமிழகத்துக்கு நாத்திகப் பிரச்சாரம் புதிதல்ல. அதற்கென்று நீண்ட நெடிய மரபு இங்கு இருக்கிறது. குறிப்பாக, நவீன அரசியல் வரலாற்றில் சாதிக்கு எதிராக இங்கு பெரியார் தொடங்கிய கலகம் அதன் மையத்திலேயே கடவுளுக்கும் மதத்துக்கும் எதிரான குரலைத் தாங்கியது. ஆத்திகர்கள் இதற்குக் காலம் முழுவதும் கடுமையாக எதிர்வினையாற்றி வந்திருக்கிறார்கள். ஆனால், அது ஆகப் பெருமளவில் கருத்துத் தளத்திலேயே அமைந்து வந்திருக்கிறது. எல்லாவற்றையும் தாண்டி பொதுவெளியில், ஒரு கடைவீதியில் இன்னும் சொல்லப்போனால், கோயில்கள் அருகில் இருக்கும் இடங்களிலேயே மேடை போட்டு கடவுள்களுக்கும் மதத்துக்கும் எதிராகப் பேசுவதும், கூட்டத்தில் பங்கேற்பவர்களைத் தாண்டி, ஏனையோர் அதை வேடிக்கை பார்த்தவாறே கடப்பதும் அநேகமாக தமிழ்நாட்டில் தான் இத்தனை சாதாரணமாக நடக்கும். இந்த ஜனநாயகமும் சகிப்புத்தன்மையும் ஒருவகையில் தமிழகத்தின் மிகப் பெரிய சொத்துகள். இந்து மதத்தைத் தாண்டியும் கிறிஸ்தவம், இஸ்லாம் என்று எல்லா மதத்தினரிடமுமே ஏனைய பிராந்தியங்களைக் காட்டிலும் வலுவான ஜனநாயகத்தன்மை உண்டு. ஆனால், இன்றைக்கு அந்தச் சூழல் மாறிக்கொண்டிருக்கிறது. இந்த முறை அதற்கான வெளிப்பாடு முஸ்லிம் சமூகத்திலிருந்து நிகழ்ந்திருக்கிறது.


தமிழகத்தில் இன்று செல்வாக்கு அடைந்திருக்கும் சில முஸ்லிம் அமைப்புகள் ஒற்றைக் கலாச்சாரத்தை முன்னிறுத்துகின்றன. அவை தமிழ் முஸ்லிம் சமூகத்துக்குள் ஒலிக்கும் ஜனநாயக, பன்மைத்துவமிக்க குரல்களை அச்சுறுத்துகின்றன என்பதை முஸ்லிம் அறிவுஜீவிகள் பலரும் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். இது தொடர்பில் அவர்கள் தொடர்ந்து பேசியும் எழுதியும் வந்திருக்கின்றனர். ஆனால், அவர்களின் குரலை அமுக்கத்தான் பெருமளவில் முயற்சிகள் நடக்கின்றனவே தவிர, அந்தக் குரல்களிலுள்ள நியாயத்தைப் பரிசீலிக்கவோ, இந்தப் புதிய போக்கின் பின்னுள்ள அபாயங்களைப் புரிந்துகொள்ளவோ அந்தப் போக்கிலுள்ள பலர் தயாராக இல்லை. மதவாதத்தை மதவாதத்தைக் கொண்டு எதிர்க்க முடியாது. ஜனநாயக சக்திகள் இந்த உண்மைக்கு முகம்கொடுக்க வேண்டும். ஜனநாயகத்துக்கு மட்டும் அல்ல; சக உயிர் வாழ்வதற்கான சூழலையும்கூடக் கேள்விக்குள்ளாக்கிவிடக் கூடியது சகிப்பின்மை. தமிழ் முஸ்லிம் சமூகமானது, இந்தியாவில் எந்த ஒரு மாநிலத்தில் உள்ள முஸ்லிம்களைக் காட்டிலும் பன்மைத்துவமும் சகிப்புத்தன்மையும் கொண்ட முன்னுதாரணச் சமூகம். எல்லாக் கலாச்சாரங்களுக்கும் இடமளிக்கும் இந்த தாராளவாதப் போக்குதான் இன்னமும் தமிழகத்தை மதவாத சக்திகளிடமிருந்து விலக்கிவைத்திருக்கிறது. தூய்மைவாதிகள் - அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயினும் சரி - உண்மையில் அந்த மதச்சார்பின்மைக் கோட்டையைத்தான் இன்று தங்கள் சகிப்பின்மையால் உடைக்க உதவுகிறார்கள்!

---

# பாரூக்கின் தந்தை அளித்த பேட்டி

# கத்தியால் வெட்டிய போதும் கடவுள் இல்லை என்று கூறியிருக்கிறார் என் மகன்

*பாரூக்கின் தந்தை ‘தமிழ் இந்து’ நாளேட்டுக்கு அளித்த பேட்டி:*



கோவை உக்கடம் லாரிப்பேட்டைக்கு அருகில் உள்ள பிலால் எஸ்டேட் பகுதியில் உள்ளது, கடவுள் மறுப்பில் தீவிரம் காட்டியதால் கொல்லப்பட்ட ஃபாரூக்கின் சிறிய வீடு. ஃபாரூக்கின் மனைவி ரஷீதா(31) குர்ஆன் துவா செய்து கொண்டு இருந்தார். அவரைச் சுற்றிலும் கண்ணீருடன் உறவினர்கள்.

“நாங்கள் யாரும் எம் மார்க்கத்துக்கு விரோதிகள் அல்ல. தினமும் 5 வேளை நமாஸ் செய்பவர்கள். தவறாது நோன்பு மேற்கொள்பவர்கள். ஃபாரூக்கின் பிள்ளைகள் அப்ரீத்(13), ஹனபா(8) ஆகியோர் இஸ்லாமிக் அராபிக் பள்ளியில்தான் 1, 6-ம் வகுப்பு படிக்கிறார்கள். எந்த நிலையிலும் மார்க்கத்தைத் தாண்டி நடக்குமாறு ஃபாரூக் எங்களிடம் கூறியதில்லை. அதனால், அவரின் கடவுள் மறுப்புக் கொள்கைக்கும் நாங்கள் எதிராக நிற்கவில்லை. அதற்காக கொலைகூட செய்வார்களா? வேதத்தை முழுமையாகப் படித்து, புரிந்துகொள்ளாதவர்களாலேயே அவர் கொல்லப்பட்டுள்ளார். கடவுள் எதையும் மன்னிக்கக் கூடியவர். இப்படி யாரையும் அவர் தண்டிக்கச் சொன்னதில்லை” என்கிறார் ஃபாரூக்கின் தாய் நதீஷா.

அவரது தந்தை அமீது கூறும்போது, “கடவுள் மறுப்பு வாதத்தை முகநூலில் விரிவாகப் பதிவிட்டுள்ளார் ஃபாரூக். அதை ஏற்றுக்கொள்ளாதவர்கள், அவர் முதுகிலேயே கத்தியால் குத்திக் கொன்றுள்ளனர். அதற்குரிய நீதியை இறைவன் வழங்க வேண்டும். தொடக்கத்தில் ஃபாரூக் இறை நம்பிக்கையுடன்தான் இருந்தார். பள்ளிவாசல் தொழுகைக்கும் சென்று வந்தார். இங்கு பெரியாரிஸ்ட்களுடன் சேர்ந்து, கடவுள் மறுப்பு, தலித் சமுதாய விடுதலை குறித்து பேசினார். ஜாதி மறுப்பு, வரதட்சணை மறுப்பு திருமணங்களை முன்னின்று செய்துவைப்பார். வரதட்சணை வாங்கி நடைபெறும் திருமணத்துக்குச் செல்லமாட்டார்.

அவரிடம் நாங்கள் “இங்கு அனைவருமே இறை மார்க்கத்தில் ஈடுபட்டிருக்கும்போது, நீ மட்டும் கடவுள் மறுப்பு செய்வது சரியானதல்ல. தனி ஆளாக என்ன செய்ய முடியும்?” என்று கேட்டதற்கு, “100 பேரில் ஒருவர் எதிர்ப்பதுதான் போராட்டம்” என்பார்.

சசிகுமார் கொலை நடந்தபோது, உக்கடம் பகுதியில் கலவரம் ஏற்பட்டது. அப்போது வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்த ஃபாரூக் உள்ளிட்டோர் மீது போலீஸார் நடவடிக்கை மேற்கொண்டனர். பின்னர்தான் ஃபாரூக் பெரியாரிஸ்ட், திராவிடர் விடுதலை கழகத்தைச் சேர்ந்தவர் என்று அனைவருக்கும் தெரியவந்தது.

பின்னர் குண்டர் தடுப்புச் சட்டத்தில் ஃபாரூக் கைது செய்யப்பட்டார். கொளத்தூர் மணி உதவியால் 3 மாதங்களில் சிறையிலிருந்து வெளிவந்தார். இப்போதும்கூட, அவரது கொலைக்கு கண்டனம் தெரிவித்து கொளத்தூர் மணி பேட்டி கொடுத்ததால்தான், இந்த சம்பவம் வெளியில் வந்தது. இல்லையேல், வியாபாரத்தில் கொடுக்கல்-வாங்கல் தகராறில் முஸ்லிம் இளைஞர் கொலை என்று வழக்கை முடித்திருப்பார்கள்.

கடவுள் மறுப்பு கொள்கையை முகநூலில் பதிவிட்டதால், பலரும் எச்சரிக்கை விடுத்தனர் என்றும் தற்போது கூறுகிறார்கள். இவை குறித்தெல்லாம் எங்களுக்கு முன்பு எதுவும் தெரியாது. அவரை கத்தியால் குத்தியபோதுகூட ‘கடவுள் இல்லை’ என்று கூறியவாறே உயிரை விட்டதாகக் கூறுகிறார்கள். அவர் மாற்றிக் கூறியிருந்தால்கூட உயிரோடு விட்டிருப்பார்களாம்.

ஃபாரூக் கொலை வழக்கில் தற்போது சரணடைந்தவர்கள், கொலை நடந்த அடுத்த நாள் பிண வறையில் உடனிருந்தனர். அடக்கம் செய்யும் இடத்துக்கும் வந்தனர். பின்னர் நீதிமன்றத்தில் சரணடைந்தனர் என்பதுதான் மிகவும் வேதனையளிக்கிறது. நம்பிச் சென்ற நண்பனையே கொலை செய்துவிட்டனர். என் மருமகளும், பேரக் குழந்தைகளும் ஆதரவின்றி தவிக்கின்றனர். அவர்களை எவ்வாறு தேற்ற முடியும். கொளத்தூர் மணி அறிக்கைக்குப் பின்னரே பல்வேறு அமைப்பினரும் கண்டனம் தெரிவித்தனர்.

‘இஸ்லாத்தை ஏற்பவர்கள் ஏற்கலாம்; ஏற்க இயலாதவர்களும் சுதந்திரமாக இருக்கலாம்’ என்று ஜவாஹிருல்லா கூறியுள்ளார். எங்களைப் பொறுத்தவரை குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இனியும் இதுபோல நடக்கக்கூடாது” என்று கண்ணீருடன் தெரிவித்தார்.

இதுவரை அரசுத் தரப்பிலோ, ஆளுங்கட்சித் தரப்பிலோ யாரும் ஃபாரூக் குடும்பத்தினரை சந்திக்க வில்லை. ஆதரவின்றி 2 குழந் தைகளுடன் தவிக்கும் ரஷீதாவின் வாழ்க்கைக்கு அரசுத் தரப்பில் உத்தரவாதம் தர யாருமில்லை என்பதுதான் வேதனைக்குரியது என்கின்றனர் அவரது உறவினர்கள்.

---

# மதத்தை மறுக்கும் ‘இஸ்லாமிய’ நாத்திகர்கள் கடும் கண்டனம்

இஸ்லாமிய மதத்தை மறுத்து நாத்திகர் பண்பாட்டுக் கழகம் என்ற பெயரில் இயங்கும் அமைப்பு சார்பாக சென்னை பாரூக் நினைவு கூட்டத்தில் அலாவுதீன் பதிவு செய்த கண்டனம்:

பாரூக் பிறந்த சமூகம் சார்ந்த இஸ்லாம் சமயத்திலிருந்து வெளியேறி எம்மில் பெரும்பாலான நண்பர்களைப் போலவே தன்னையும் மதமற்றவராக இஸ்லாமிலிருந்து வெளியேறியவர் என்று அறிவித்துக் கொண்டார். அதோடு அல்லாமல் இஸ்லாம் என்பது அர்த்தமற்ற - அபத்தமானது. விமர்சனங்களுக்கும், விசாரணைகளுக்கும் அப்பாற்பட்டது அல்ல என்ற கருத்துகளையும் வலிமையாக வலியுறுத்தி வந்தார். பாபர் மசூதி இடிப்பிற்குப் பின்னர் இந்து மதவெறியர்களுக்கு இணையாக இஸ்லாமிய அடிப்படைவாதிகள், பாமர இஸ்லாமிய மக்களை திட்டமிட்டு அரணாக்கிக் கொண்டு, தங்களது சொந்த இலாபத்திற்காக மதத்தின் பெயரால் மக்கள் அனைவரையும் பிளவுபடுத்தும் ஆபத்தான செயலில் ஈடுபடுவதையும் தொடர்ந்து விமர்சித்து வந்தார்.

தந்தை பெரியார் உள்ளிட்ட பகுத்தறிவாளர்களின் அறிவார்ந்த கருத்துக்களை கேட்க, படிக்கக் கூடாத மக்களாக முஸ்லிம்களை கையாளும் இஸ்லாமிய அடிப்படை வாதிகளையும் பயங்கரவாதிகளையும் அம்பலப்படுத்தி தனிமைப்படுத்துவதிலும், மனித மாண்புகளை உயர்த்திப் பிடிக்கும் பகுத்தறிவு செயற்பாட்டாளர்களை ஒருங்கிணைப்பதிலும் எங்களோடு உடன்பட்டிருந்த அன்புத் தோழர் கோவை பாரூக்கின் படுகொலை, நாட்டின் ஒட்டு மொத்த ஜனநாயக ஆர்வலர்களுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் நேர்ந்துள்ள மிகப் பெரிய இழப்பாகும்.

இஸ்லாமுக்குள் கருத்துச் சுதந்திரத்திற்கு இடமில்லை. அவ்வாறு சிந்திப்பவர்கள் கொல்லப்படுவார்கள் என்று எச்சரிப்பதற்காகவே கருத்தை கருத்தால் வெல்ல இயலாத கோழைகளால் கோவை பாரூக்கின் படுகொலை நிகழ்த்தப்பட்டுள்ளது. கோவை தோழர் பாரூக் படுகொலை தொடர்பான செய்திகளை கடுமையாகக் கண்டிக்கும் ஜனநாயக சக்திகளை, இஸ்லாமிய மக்களுக்கு எதிரானதாக மடைமாற்றி, இஸ்லாமிய அடிப்படைவாதத்தை நியாயப்படுத்தும் சில அமைப்புகளின் செயல் கடும் கண்டனத்திற்குரியது.

## மதுரையில் இரயில் மறியல்

தமிழகத்தை சுடுகாடாக்கும் ஹைட்ரோ கார்பன் மற்றும் மீத்தேன் திட்டத்தை நிறுத்தக் கோரியும் சிங்கள அரசின் தமிழக மீனவர் படுகொலையைக் கண்டிக்கத் தவறிய மத்திய அரசைக் கண்டித்தும் இரயில் மறியல் போராட்டம் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மதுரையில் நடைபெற்றது.

மதுரை மாவட்டக் கழகச் செயலாளர் மா.பா. மணி கண்டன் போராட்டத்துக்கு தலைமை தாங்கினார்.

இதில் எஸ்.டி.பி.அய். மாவட்ட செயலாளர் அபுதாகிர், பெரியார் திராவிடர் கழக ஒருங்கிணைப் பாளர் காசு.நாகராசன், தந்தை பெரியார் திராவிடர் கழக மாவட்ட தலைவர் கிட்டு ராசா, ஆதித் தமிழர் கட்சி மாவட்ட செயலாளர் சிதம்பரம், கோபால் ராமகிருஷ்ணன் மற்றும் ஆதித்தமிழர் பேரவை உள்ளிட்ட தோழமை அமைப்புத் தோழர்களும் கலந்து கொண்டனர்.

பெரியார் நிலையத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு ஆளும் மத்திய அரசை கண்டித்து முழக்கமிட்டவாறே இரயில் நிலையத்திற்குள் நுழைய முயன்ற 22 தோழர்கள் காவல் துறையினரால் தடுத்து கைது செய்யப்பட்டனர். மாலை தோழர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.


"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535


## பறிபோகிறது, தமிழர் வேலை வாய்ப்புகள்

# தபால் ஊழியர் பணிநியமனத்தில் இந்திக்காரர்களின் மோசடி

தமிழ்நாட்டில் உள்ள தபால் நிலையங்களில் தபால்கார் பதவிகளை நிரப்பக்கோரி கடந்த ஆண்டு 21.10.2016 அன்று தமிழ்நாடு தபால் வட்டத்தின் சார்பில் அறிவிப்பாணை வெளியிடப்பட்டது. இப்பதவிக்கு தமிழகம் மட்டுமல்லாமல் இந்திய அளவில் இருந்து ஒரு லட்சத்திற்கு மேற்பட்டோர் விண்ணப்பித்து நுழைவுத்தேர்வும் எழுதினர்.

இத்தேர்வில் தமிழில் கட்டாயமாக 25 மதிப்பெண்களுக்கு தேர்வெழுதவேண்டும்.இதன் முடிவுகள் நான்கு நாட்களுக்கு முன்னர் இணையத் தில் வெளியிடப்பட்டது. தமிழில் வினாத்தாள் மிகவும் கடினமாக இருந்ததால் மற்ற தாள்களில் தேர்ச்சி பெற்றவர்கள் தமிழில் தோல்வி அடைந்து இருந்தனர். ஏதோ, தமிழ்ப் பேராசிரியர் பதவிக்கு தேர்வு நடப்பதுபோல் அவ்வளவு கடினமாக வினாத்தாள் தயாரிக்கப்பட்டிருந்தது.

அதன் பிறகு, தமிழில் அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சிபெற்றவர்களின் பட்டியலைப் பார்த்ததும் நம்மவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. இவர்கள் யாரும் தமிழ்நாட்டில் இல்லை, தமிழர்களும் இல்லை அனைவரும் அரியானா, மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களை அலைபேசியில் தொடர்பு கொண்டபோது ஒருவருக்கும் தமிழ் தெரியவில்லை தொடர்பு கொண்ட சற்று நேரத்திற்கு பின் இவர்களின் அலைபேசிகள் அனைத்தும் அணைக்கப்பட்டு விட்டது.

தமிழ்நாடு தபால்துறை யின் இணைய பக்கத்தில் இருந்த இத்தேர்வின் முடிவுக்கான இணைப்பும் நீக்கப்பட்டு இருப்பதும், இதில் மேலும் மர்மத்தை ஏற்படுத்துகிறது.

ஏற்கெனவே தமிழகத்தில் பத்தாண்டுகளுக்கும் மேலாக ரயில்வே, பாதுகாப்பு, வருமானவரித்துறை, சுங்கம், கலால், ஏ.ஜி அலுவலகம், வருங்கால வைப்பு நிதி, ஈ.எஸ்.அய். ஆகிய அலுவலகங்களில் இந்தி பேசுவோர் பல ஏமாற்றுகள், மோசடிகள் புரிந்து பணிகளில் நுழைந்து பணியாற்றி வருகின்றனர். தமிழர்களின் உரிமைகளை முறைகேடுகள் செய்து பறித்து வருகின்றனர். இதேபோல் பணியாளர் தேர்வு ஆணையம் நடத்தும் தேர்வுகளின் மோசடித் தனங்களை பல முறை மத்திய அரசிற்கு கொண்டு சென்றும், போராட்டங்கள் பல நடத்தியும், தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களின் பார்வைக்கு கொண்டு சென்றும் பலனில்லை. இன்று நேரடியாகவே முறைகேடு செய்து, மோசடி செய்து தமிழ் மொழித்தாள்களில் அதிக மதிபெண்கள் பெற்றதாகக் காட்டி தபால் ஊழியர் பணியிடங் களுக்கும் இந்தி பேசுபவர்கள் பணி நியமனம் பெறப்போகிறார்கள்.

தமிழக அரசும், அரசியல் கட்சிகளும், தமிழகத் தில் இருந்து சென்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் களும் இதை எதிர்த்து குரல் கொடுக்க வேண்டும்.

குரல் கொடுப்பீர்களா?

# தமிழ்நாடு மாணவர் கழகம் ஆளுநர் மாளிகை முற்றுகை: கைது



உயர்கல்வி நிறுவனங்களில் தலித் மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டித்தும், ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக ஆய்வு மாணவர் முத்து கிருட்டிணன் மரணத்துக்கு நீதி விசாரணை கோரியும், தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரி, தனியார் மருத்துவக் கல்லூரிகளில் அரசு நிரப்பக் கூடிய இடஒதுக்கீட்டுக்குரிய இடங்களில் நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்கக் கோரியும் தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் ஆளுநர் மாளிகையை முற்றுகையிடும் போராட்டம் மார்ச் 19 பகல் 12 மணியளவில் நடந்தது. மத்திய கைலாஷ் அருகே மாணவர்கள் திரண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன முழக்கமிட்டு ஆளுநர் மாளிகை நோக்கி புறப்பட்டபோது காவல்துறை கைது செய்தது. பாரி சிவக்குமார் தலைமையில் ஜெயப்பிரகாஷ் முன்னிலையில் நடந்த இந்தப் போராட்டத்தில் 20 தோழர்கள் கைது செய்யப்பட்டனர். மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

**தக்கலையில்** : குமரி மாவட்டத் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக நீட் தேர்விலிருந்து விலக்குக் கோரி தக்கலை வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கழக மாவட்டச் செயலாளர் தமிழ் மதி தலைமைத் தாங்கினார். நீதி அரசர் (தலைவர்.பெ.தொ.க) முன்னிலை வகித்தார். விஸ்ணு வரவேற்புரை நிகழ்த்தினார். பால் பிரபாகரன் (கழக பரப்புரைச் செயலாளர்) கண்டன உரை ஆற்றினார். ஆர்ப்பாட்டத்தை விளக்கி தோழர்கள் மேசியா (ப.நா.புரம் ச.ம.தொ.செயலாளர், வி.சி.க,), போஸ் (சமூக ஆர்வலர்), முரளீதரன் (பொது பள்ளிகான மாநில மேடை செயலாளர்), இரமேஸ், இராஜேஸ் குமார், இராதாகிருஷ்ணன், (MCUP(I), ஜாண் மதி, சூசையப்பா, அனி ஆகியோர் உரையாற்றினர். மஞ்சு குமார் நன்றியுரையுடன் முடிந்தது.

### பாரூக் படுகொலை: பெரம்பலூரில் கண்டன ஆர்ப்பாட்டம்



கழகத் தோழர் பாரூக் படுகொலையைக் கண்டித்து மார்ச் 25 மாலை 5 மணியளவில் பெரம்பலூர் பேருந்து நிலையம் காந்தி சிலை அருகில் கண்டன ஆர்ப்பாட்டம், மாவட்ட தலைவர் தாமோதரன் தலைமையில் நடைபெற்றது. என். செல்லத்துரை (தீண்டாமை ஒழிப்பு முன்னணி), திருச்சி மாவட்ட பொறுப்பாளர்கள் தமிழ் முத்து, குணராசு, வீ.ஞான சேகரன் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), கிருட்டிணசாமி (அம்பேத்கர் அறக்கட்டளை), அக்ரி. ஆறுமுகம் (தி.க.), சித்தார்த்தன் (தி.க) ஆகியோர் கண்டன உரையாற்றினர். பாரூக் குடும்பத்துக்கு தோழர்கள் ரூ.13,000 நிதியை மாவட்ட தலைவர் தாமோதரனிடம் வழங்கினர்.

# பாரூக் கொலையைக் கண்டித்து இராசிபுரத்தில் ஆர்ப்பாட்டம்




இராசிபுரம் நகர திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக, கோவைத் தோழர் பாரூக், இஸ்லாமிய அடிப்படை வாதிகளால் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் இராசிபுரம் புதிய பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு நகர அமைப்பாளர் இரா.பிடல்சேகுவேரா தலைமை ஏற்க, மதி.மு.க.நகரச்செயலாளர் நா.ஜோதிபாசு, சி.பி.ஐ.எஸ்.மணிமாறன், புரட்சிகர இளைஞர் முன்னணியின் பாலகிருஷ்னன் ஆகியோரது கண்டன உரையைத் தொடர்ந்து மாவட்ட செயலாளர் சரவணன், மாவட்ட அமைப்பாளர் வைரவேல், மாவட்ட பொருளாளர் அ.முத்துப்பாண்டி, ஈரோடு மாவட்ட செயலாளர் வேணுகோபால் மற்றும் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, அமைப்புச் செயலாளர் ப.இரத்தினசாமி வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன் கண்டன உரையாற்றினர்.

திருப்பூர் தோழர் சங்கீதா நன்றியுரை கூற ஆர்ப்பாட்டம் நிறைவுபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

# ஈரோடு மரவபாளையத்தில் இரங்கல் கூட்டம்



இஸ்லாம் அடிப்படைவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட கோவை தி.வி.க. தோழர் பாரூக் , ஈரோடு மாவட்டம் (தெற்கு) சார்பாக 19.03.2017 அன்று மாலை 7 மணிக்கு மரவபாளையத்தில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அமைப்பாளர் ப.குமார் தலைமை ஏற்க, மறைந்த தோழருக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது. காவை இளவரசன், கோபி வேலுச்சாமி ஆகியோர் இரங்கலுரையாற்றினர். தோழர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# எந்த மதத்தையும் ஏற்காதவர் பெரியார்






(முதல் பக்கத் தொடர்ச்சி)

தங்களை திராவிடர் விடுதலைக் கழகத்தில் பலத்த கரவொலிகளுக்கிடையே உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டனர். பல்வேறு அமைப்புகள், இயக்கங்கள் சார்ந்த தோழர்களும், இருபால் கருஞ்சட்டைத் தோழர்களுமாக அரங்கம் நிரம்பி வழிந்தது. படுகொலை செய்யப்பட்ட பாரூக்கின் படத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார். பாரூக்கின் குடும்பத்துக்கு தோழர்கள் கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் ரூ.56,500 நிதி வழங்கினர்.

இறை மறுப்பாளராகவும், மத மறுப்பாளராகவும் வாழ்ந்து இலட்சியத்துக்கு உயிரை விலையாகக் கொடுத்த பாரூக்கிற்கு உரிய மரியாதை செலுத்தும் நோக்கில் பெரியாரின் கடவுள் - மத மறுப்புக் கொள்கைகளை விளக்கி பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார். பெரியார் அனைத்து மதங்களையும் எதிர்த்தவர். இந்து மதம் - ஜாதியையும் 'சூத்திரர்' என்ற இழிவையும் சுமத்துவதால் சமுதாய விடுதலை நோக்கில், இந்து மத பார்ப்பனிய எதிர்ப்புக்கு முன்னுரிமை தந்தார். அதனால் ஏனைய மதங்களை அவர் ஆதரித்தவரில்லை என்று கூறிய விடுதலை இராசேந்திரன், பெரியாரின் கீழ்க்கண்ட கருத்தையும் சுட்டிக்காட்டினார்.

*"எனக்கு மோட்சத்திலோ பாவ மன்னிப்பிலோ கடவுள் ஆட்சியிலோ சிறிதும் நம்பிக்கைக் கிடையாது. ஆத்மா என்பதோ ஜீவன் என்பதோ ஒன்று இருப்பதாக நான் நம்புபவனே அல்லன். அது விஷயத்தில் எல்லா மதங்களும் ஒன்றுபோல்தான் இருக்கின்றன. உலகிலுள்ள சகல மதங்களுக்கும் ஒரு சர்வ சக்தியுள்ள கடவுளும் மோட்சமும் நரகமும் ஜீவனும் உண்டு. அவற்றில் ஒன்று பெரியது, மற்றது சிறியது என்று சொல்வதற்கில்லை. ஒரு மதமும் வேண்டாம் என்பதுதான் சரியான பேச்சும் திட்டமும் ஆகும். எனக்கு மதத்திலும் தெய்வ பக்தியிலும் தியானத்திலும் நம்பிக்கையில்லை.*

*சாதி, மதம், தெய்வம், தியானம் என்கின்ற நான்கு தத்துவங்களும் அழிந்தாக வேண்டும். அவை அழியாமல் மனித சமுதாயத்திற்குச் சாந்தியும் திருப்தியும் சுகமும் கிடையா.*

*அந்த நிலை அடைந்து ஆக வேண்டும். அதுவே எனது கொள்கை.*

*மதம் மக்களுக்கு அபின் (மது) என்றார் ஒரு பெரியார். ஆனால் நான் மதம் மக்களுக்கு விஷம் என்கிறேன். மதக்காரனுக்கு சுயமரியாதையும் சுய அறிவும் இல்லை. மனிதனின் முற்போக்கையும் ஒற்றுமையையும் தடுப்பது மதம் - மனிதனுக்கு மற்ற சீவன்களைவிட அதிக புத்தி இருந்தும் ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்கு அடிமையாய் இருக்கக் காரணம் மதம்.*

*ஆகையால் நான் எந்த மதத்திற்கும் விரோதிதான். மதங்கள் இந்த நாட்டிலிருந்து விரட்டப்பட வேண்டும். அவைகள் ஒழிய, ஒழிக்கப்பட வேண்டும் என்கின்ற கருத்துடையவன் நான்.*

*நான் சமுதாய சமத்துவத்திற்குப் பாடுபடுகின்ற ஒரு தொண்டனாவேன்."*

இதுவே பெரியாரின் கருத்து என சுட்டிக்காட்டினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசுகையில், "பாரூக் கொலை செய்யப்பட்ட செய்தி அறிந்து, நாங்கள் கோவைக்கு விரைந்தோம். மருத்துவமனையில் அவரது உடல் இருந்தபோது சுமார் 400 பேர் கூடி விட்டார்கள். அதில் இஸ்லாமியர்கள் எண்ணிக்கை சுமார் 40 பேர் தான். மற்றவர்கள் இஸ்லாமியர் அல்லாத தோழர்கள் தான். கொலை செய்யப்பட்டது ஒரு இஸ்லாமியராக இருந்தும்கூட வழக்கம்போல் இதுபோன்ற நிகழ்வுகளில் பெரும் திரளாகக் கூடும் இஸ்லாமியர்கள் வரவில்லை. இறை மறுப்பாளர் என்பதற்காக அங்கே வருவதைக்கூட தமது சமூகம் விரும்பாது என்ற எண்ண ஓட்டத்தைத் தவிர வேறு காரணம் ஏதும் இருக்கும் என்று நான் கருதவில்லை. உண்மையிலேயே இஸ்லாமிய சமூகத்தின் இந்தப் புறக்கணிப்பு எங்களுக்கு கவலையையும் அதிர்ச்சியையும் தந்தது. மற்றொரு செய்தியையும் நான் பதிவு செய்தாக வேண்டும். பாரூக் உடலை முதலில் "நீங்களே உங்கள் கழக சார்பில் மதச் சடங்குகளின்றி அடக்கம் செய்து கொள்ளுங்கள்" என்று அவரது தந்தை என்னிடம் கூறினார். பிறகு பிற்பகல் 3 மணியளவில் "நாங்களே எங்கள் மத முறைப்படி அடக்கம் செய்து விடுகிறோம்" என்று கூறி விட்டார். அவருக்கு எங்கிருந்தோ அழுத்தங்கள் வந்திருக்கின்றன என்பதை நாங்கள் புரிந்து கொண்டு, உங்கள் விருப்பப்படியே செய்து கொள்ளுங்கள் என்று கூறிவிட்டோம். மதமறுப்பு கொள்கை பேசியதற்காகவே உயிர்ப்பலியான தோழரின் உடல் அடக்கம் மதச் சடங்குகளோடுதான் நடந்தது. மற்றொரு கருத்தையும் நான் பதிவு செய்திட விரும்புகிறேன். பாரூக் உடல் அடக்கம் செய்யப்பட்ட பிறகு, அவரது மனைவி மற்றும் தாயாருக்கு ஆறுதல் கூறுவதாக - இஸ்லாமிய பெண்கள் குழுவாக வந்தனர். அவர்கள் பாரூக் துணைவியாரிடம், "பாரூக் நபிகளையே எதிர்த்து வந்திருக்கிறார். இன்னும் ஒரு மாதத்தில் நபிகள் கருத்துகளை எதிர்த்து நூல் வெளியிட இருந்ததாக சொல்கிறார்களே, ஒரு இஸ்லாமியராக இருந்து கொண்டு - இப்படி எல்லாம், இறைவனையும், தூதுவரையும் எதிர்க்கலாமா ?" என்று கேட்டிருக்கிறார்கள்.

ஆக பாரூக் கொலை செய்யப்பட்டதில் நியாயம் இருக்கிறது என்ற கருத்துருவாக்கம் அங்கு அவருக்கு எதிராக அந்தப் பகுதியில் திட்டமிட்டு நடத்தப்பட்டு வந்திருக்கிறது என்பதை நாங்கள் உணர்ந்தோம். பாரூக்கின் துணைவியாரும் அவரது தாயாரும் ஒரே ஒரு கேள்வியைத்தான் அவர்களிடம் கேட்டிருக்கிறார்கள். "பாரூக் இறை மறுப்பு பேசியது - குற்றம் என்றால், அதற்கான அல்லா தண்டனையை தரட்டும், இவர்கள் அவரை ஏன் கொலை செய்ய வேண்டும் ?" என்ற கேள்வியைத்தான் கேட்டிருக்கிறார்கள். எங்களுடைய பெரியார் இயக்க மேடைகளில் எப்போதுமே இஸ்லாமிய கருத்து சுதந்திரத்தை அங்கீகரித்தே வந்திருக்கிறோம். எங்கள் மேடையில் பேசும் இஸ்லாமிய அமைப்புகளின் தலைவர்கள்கூட "ஏக இறைவன் சாந்தியும் சமாதானமும் உங்களுக்கு அருள்வானாக" என்று எங்களுக்கும் சேர்த்து ஏக இறைவனை வணங்கித்தான் பேச்சைத் தொடங்குவார்கள். பெரியார் இயக்கக் கூட்டங்கள் நடக்கும் இடத்தின் அருகே மசூதியிலிருந்து தொழுகைக்கான அறிவிப்பு வரும்போது அந்த நிமிடங்களில் எங்கள் உரையை நிறுத்திக் கொண்டு விடுவோம். இஸ்லாமிய மதத்துக்கான கருத்துரிமையை நாங்கள் அங்கீகரித்தே வருகிறோம். ஆனால் அதே கருத்துரிமை - தோழர் பாரூக்கிற்கு மறுக்கப்பட்டு அதற்காக அவரது உயிரை விலையாகக் கொடுத்திருக்கிறார். இப்போதும் கூறுகிறோம். இஸ்லாமிய தோழர்கள் எங்கள் உறவுகள் தான். ஆனால், இத்தகைய இஸ்லாமிய அடிப்படை வாதங்கள் தலைதூக்கும்போது அதற்கான எதிர்ப்புகள் இஸ்லாமிய சமூகத்தினரிடமிருந்து வரவேண்டும் என்றே எதிர்பார்க்கிறோம். நட்புக்கரம் இந்தச் சூழலில் அவர்களிடமிருந்து நீட்டப்பட வேண்டும் என்றே நாங்கள் எதிர்பார்க் கிறோம். பெயரளவுக்கு கண்டன அறிக்கைகளோடு நிறுத்திக் கொண்டு விட்டார்கள். அதிலும் சில அமைப்புகள் கண்டனம் தெரிவிக்கக்கூட தயாராக இல்லை. இனி எங்களுடையதான தோழமையை முடிவு செய்ய வேண்டியது இஸ்லாமிய அமைப்புகள்தான்" என்று கொளத்தூர் மணி கழகத்தின் நிலைப்பாட்டை தெளிவாக விளக்கினார். தொடர்ந்து பெரியார் 'இன இழிவு ஒழிய வேண்டும்' என்ற ஒரே காரணத்துக்காகத்தான் இஸ்லாமிய மதத்தில் சேரலாம் என்று கூறினாரே தவிர, இஸ்லாமிய மதக்கோட்பாடுகளை ஆதரித்து அல்ல. நபிகள் நாயகம் விழா இஸ்லாமியர்கள் நிகழ்ச்சிகளிலேயே பெரியார் இஸ்லாமிய மதத்தின் மீதான விமர்சனங்களை முன் வைத்திருக்கிறார். அப்படி பெரியார் பேசிய பல்வேறு கருத்துகளை அவரது உரையிலிருந்து அடுக்கடுக்கான ஆதாரங்களை எடுத்துக் காட்டினார். சென்னை மாவட்ட கழகத் தலைவர் வேழவேந்தன் நன்றி கூற 9 மணியளவில் நிகழ்வு நிறைவடைந்தது.

## "குழந்தைகள் சிறப்பு பழகு முகாம்"

தமிழ்நாடு அறிவியல் மன்றம் நடத்தும் குழந்தைகள் பழகு முகாம் : நாள் : 10.5.2017 முதல் 14.5.2017 (5 நாள்கள்) இடம் : பெங்களூர் .

கற்பனைத் திறன் வளர்த்தல், படைப்பாற்றல், குழு உரையாடல், கதை உருவாக்கல், ஓவியப் பயிற்சி, கவிதை, கட்டுரை புனைதல், அறிவியல் விளையாட்டுகள் உள்ளிட்ட நிகழ்வுகள்.

10 வயது முதல் 15 வயது வரை. குறைந்த பட்ச பங்களிப்பு : குழந்தை 1-க்கு : ரூ.1500/- ரூ.1500/ செலுத்த இயலாதவர்கள் ரூ.1000/- செலுத்தலாம்.

முன் பதிவு அவசியம். பதிவு செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய எண் : 98424 48175

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 30th March 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN